# அத்வைத பஞ்சரத்னம்

## ஸ்ரீ அதிசங்கரர் அருளியது



ப்ரக்ஞன்

ஸ்ரீ ஆதிசங்கரர் அருளிய

# அத்வைத பஞ்சரத்னம்

விளக்க உரை

## ப்ரக்ஞன்

# நூல் விளக்கம்

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | அத்வைத பஞ்சரத்னம் |
| விளக்க உரை | : | ப்ரக்ஞன் [Prajnan] |
| மொழி | : | தமிழ் |
| வகை | : | தன்னாட்டம் |
| முதல் பதிப்பு | : | 2022 |
| நூலின் அளவு | : | டெம்மி |
| பக்கங்கள் | : | 22 |
| தாள் | : | A5 (5.83" X 8.27") |
| எழுத்து அளவு | : | 12 புள்ளிகள் |
| உரிமை | : | அனைவருக்கும் |
| கட்டமைப்பு | : | சாதா பைண்டு அட்டை |
| கணினி அச்சு | : | ஓம் கிராபிக்ஸ் |
| விலை | : | அக விழிப்பு |

ஸ்ரீ குருப்யோ நம:

# அத்வைத பஞ்சரத்னம்

## முன்னுரை

இந்த **“அத்வைத பஞ்சரத்னம்”** என்ற ஐந்து ஸ்லோகங்கள் பகவான் ஸ்ரீ ஆதிசங்கரர் அவர்களால் இயற்றப்பட்டது.

இவைகள் அத்வைதத்தை மையமாகக் கொண்ட ஸ்லோகங்களாக உள்ளன. **“அத்வைதம்”** என்றால், இரண்டற்றது என்று பொருள்.

ஆக, ஒன்றேயான அந்த ஏக வஸ்துவை அறிமுகம் செய்ய, விளைமதிக்க முடியாத ரத்தினத்துடன் இந்த ஸ்லோகங்களை ஒப்பிட்டு, ரத்தினம் காண்பதற்கு எவ்வாறு ஒளி விட்டு பிரகாசிக்கின்றதோ?, அதுப்போல, இந்த ஸ்லோகங்கள் ஒளிப்பொருந்திய பிரகாசத்துடன் வெளிப் படுத்துகின்றது என்ற பொருளில், இந்த ஐந்து ஸ்லோகங் களையும், ஐந்து ரத்தினங்களுடன் ஒப்பிடுகின்றார்.

இந்த ஸ்லோகங்கள் அனைத்திலுமே **“சிவோஹம்”** என்று முடிவடைகின்றது.

அதாவது, **‘சிவோஹம்’** என்றால், **அஹம் சிவம்** என்ற அர்த்தத்தில் **‘நானே சிவம்’** என்று பொருள் கொள்ளலாம்.

அல்லது **‘சிவம்’** என்றால் **“மங்கலம்”** என்ற ஒரு சொல் அர்த்தம் இருப்பதால், **மங்கலவடிவானவன்** என்றும் பொருள் கொள்ளலாம். மங்கலம் என்றால் **மகிழ்ச்சி** என்ற பொருளில், மகிழ்ச்சியை உடையவன் என்றும் கூறலாம்.

மகிழ்ச்சியை உடையவன் மோக்ஷத்தை அடைந்தவன் என்று பொருளாகின்றது. பொதுவில், இந்த ஸ்லோகங்கள் நான் பூரணமானவன், ஆனந்தமானவன் என்பதுப் போன்று முடிவடைகின்றது.

**“சிவோஹம்”** என்பதை **‘அஹம் பிரஹ்மாஸ்மி’** என்றும் கூறலாம்.

இந்த பரிபூரண நிலையை உணர்ந்த பகவான் ஶ்ரீசங்கரர் ஒவ்வொருவரும் தன்னை அறிந்து, அந்த ஸ்வயம் பிரகாசமாக ஒளிரக்கூடியவர்கள் என்பதை கருத்தில் கொண்டே, தான் இயற்றிய இந்த ஸ்லோகங்களை ஒளி பொருந்திய பிரகாசமான ரத்தினத்துடன் ஒப்பிடுகின்றார்.

ஒருவன் தன் உண்மை நிலையறிந்து, அவனுள் மகிழ்ச்சி உண்டாகி விட்டால், அவனுடைய நிலை மிகவும் மங்கலகரமானது என்பதை அறிந்தே, அவனை மங்கலம் பொருந்திய சிவம் என்றும், அத்தகைய அவனது அனுபவம் ஆனந்தமயமானது என்பதை இந்த ஸ்லோகங்களின் வாயிலாக தெள்ளத் தெளிவாக வெளிப்படுத்துகின்றார்.

ஒவ்வொருவரும் தன்னுடைய சுய அனுபவங்களின் வாயிலாக சில அறிவை அடைகின்றார்கள். அதுப்போல, அவர்கள் தாங்கள் அடைந்த அனுபவங்களை மற்றவர்களுக்கு வாழ்ந்துக்காட்டி, இதுபோன்ற அனுபவத்தை நீங்களும் அடையலாம் என்று, தான் அடைந்த தன்னுடைய உன்னத நிலையை தங்களது உபதேசத்தின் மூலமாக மற்றவர்களுக்கும் அறிவுறுத்துகின்றார்கள்.

அந்தவகையிலே, ஜகத்குருவான பகவான் ஸ்ரீ ஆதிசங்கரரும் தன்னுடைய ஆனந்த அனுபவத்தை அனைவரும் அறிய வேண்டும் என்று ஆசி வழங்குகின்றார்.

**'தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்**
**கற்றனைத்து ஊறும் அறிவு.' –** குறள்.

மணற்கேணியில், சிறிது மணலைத் தோண்டினால் போதும், அங்கு உடனடியாக நீர் வந்து விடும். அந்த நீரை மொண்டு எடுத்தால், மேலும் சற்று நீர் வரும். உடனே, அந்த நீர் வற்றி விடாது.

அதுப்போல, ஒருவன் தான் கற்றதை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும். அவ்வாறு மற்றவர்களுடன் பகிர்ந்து கற்றுக்கொடுக்க, கொடுக்க அவனது அறிவு மேலும், மேலும் விரிவடையும், இன்னும் விரிவாக வளரும்.

சுய நலமாக, தான் கற்றது தனக்கு மட்டும்தான் என்று வைத்துக் கொண்டு இருந்தால், அதுவே, நாளடைவில் தோண்டப்பட்ட கேணியில் மணல் சரிந்து உள்ளே விழுந்து, அந்த கேணியைத் தானாகவே மூடிக் கொள்ளும். அல்லது, அவ்வாறு, மணல் சரிந்து அந்த கேணியை மூடிக் கொள்ளா விட்டாலும், தேங்கியுள்ள நீர் இறைக்கப்படாததால், அது கெட்டுப்போய் நாளடைவில் வற்றிப்போய் விடும்.

அதுப்போல, ஒருவன் தான் கற்ற கல்வியை தனக்கும், மற்றவர்களுக்கும் பயனுடையதாக மாற்றிக் கொள்ளாவிட்டால், நாளடைவில் அவனது மறதியினால், அவன் கற்ற கல்வியின் பயன் யாருக்கும் பயனின்றி பாழாகிவிடும்.

ஆகவே, ஒருவன் தான் கற்ற உயர் கல்வியை அனைவருக்கும் பயன் அளிக்கும் விதத்தில் பயன்படுத்த வேண்டும். அவன் கல்வி கற்று விட்டு, அப்படியே விட்டு விட முடியாது. கற்றவற்றை நினைவு கூர்ந்து, அதில் உள்ள நற்பலன்களை மற்றவர்களுக்கும் கொடுத்து, மேலும், மேலும் அதைப்பற்றிய சுய அனுபவம் உண்டாகின்றவரை இவனும் படித்துக்கொண்டே இருக்க வேண்டும்.

**கற்றது கைமண் அளவு! கல்லாதது உலகளவு!** என்பார்கள்.

அதனால், ஒருவன் எவ்வளவுதான் கற்றிருந்தாலும், அந்த கல்வியினால், ஆணவம் வந்துவிடாமல், தான் கற்றது போன்று, அதன் நல்வழியில் சரியாக நிற்கவும் வேண்டும். அப்போதுதான் கற்ற கல்வியின் பயன் முழுமையாக இருக்கும். இதனையே வள்ளுவப்பெருந்தகை தான் எழுதிய குறட்பாவில்,

**கற்க கசடற கற்பவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக.** என்கின்றார்.

ஒருவன் தான் கற்ற கல்வியைக்கொண்டு, கை நிறைய சம்பாதிக்க விரும்பி, இந்த உலக விசய, சுகங்கள் போன்ற, விவகாரங்களில் ஈடுபடுகின்றான்.

தன் வாழ்க்கையின் அத்யாவசியத் தேவைகளுக்காக, பொருள் ஈட்ட விரும்பி, தன்னிடம் உள்ள பணத்தினைச் சிறிது உபயோகப்படுத்தி, அதையே முதலீடாகக் கொண்டு நன்றாக உழைக்கின்றான்.

அந்த உழைப்பின் வாயிலாக, அதிக பணத்தைச் சம்பாதித்து சந்தோசப்படுவதைப் போன்று, இவன் கற்ற கல்வியினால் பெற்ற, சிறிய அறிவை முதலீடாகக் கொண்டு, நன்றாக விசாரம் செய்து, அதன் வாயிலாக மிகப்பெரிய அறிவான அந்த பேரறிவை அறிந்துக் கொண்டு, என்றும் நீங்காத சந்தோசத்துடன் வாழ்வான் என்பதை யாரும் மறுக்க முடியாது.

இவ்வாறு, ஒருவன் தன் அறிவை விரிவடையச் செய்ய கற்றறிந்த பெரியவர்களிடமிருந்து, அவர்கள் பெற்ற ஆனந்த அனுபவ அறிவை தானும் பெற விரும்பி, அவர்கள் கூறும் அறிவுரைகளை கேட்பதினை **“சிரவணம்”** என்றும், அவ்வாறு கேட்ட விசயங்களை தன் அறிவினால், பகுத்தறிந்து ஆராய்வதை **“மனனம்”** என்றும், அவ்வாறு, ஆராய்ந்து அடைந்த அறிவின் அனுபவத்தை நடைமுறையில் கொண்டு வருவதை **“நிதித்யாஸனம்”** என்றும் கூறலாம்.

அதாவது முதலில் அறிவைப்பெற, அதனை விசாரித்து விபரங்களை கேட்டும், அதன்பிறகு அதைப்பற்றி தெளிவான ஒரு முடிவுக்கு வர, இதுவரை தான் கற்றவற்றை சிந்தித்தும், அவ்வாறு, சிந்தித்த சிந்தனையில் கிடைத்த மிகச் சிறப்பான உண்மையை நடைமுறையில் கொண்டு வந்து, அதன்படி நல்லொழுக்கத்துடன் வாழ்வதும் ஆகும்.

இன்னும், ஒருசிலர் மிகவும் கடினமாக உழைத்து பணத்தை சம்பாதிப்பார்கள். ஆனால், அவர்கள் அவ்வாறு சம்பாதித்த பணத்தை செலவு செய்யத் தயங்குவார்கள். அதாவது, மற்றவர்களுக்கும் கொடுக்கவும் மாட்டார்கள்.

**‘பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்து**
**வைத்துக் கேடுகெட்ட மானிடரே கேளுங்கள்,**
**கூடுவிட்டு ஆவிதான் போயின பின்பு யாரே**
**அனுபவிப்பார் பாவிகாள் அந்தப் பணம்?’** – அவ்வையார்.

சிலர் பணத்துக்காகப் பாடுபடுகின்றனர். பணத்தையும் அடைகின்றனர். அவ்வாறு கிடைத்த பணத்தை யாருக்கும் கொடுக்கக் கூடாது என்கின்ற கெட்ட எண்ணத்தினால், அந்தப் பணத்தை மற்றவர்களுக்குத் தெரியாமல், பூமிக்கு அடியில் புதைத்து வைத்தனர். அவ்வாறு, அன்றைய கால கட்டங்களில் மண்ணிற்கு அடியில் புதைத்து வைத்தனர்.

அதுப்போல, இன்று தங்களது வங்கிக் கணக்கில், யாருக்கும் தெரியாமல் சேமித்து வைக்கின்றனர். இதுதான் வித்தியாசம்.

இவர்களை கேடு கெட்ட மனிதர்கள் என்றும், அவர்கள் உடம்புக் கூட்டை விட்டு விட்டு அவர்களது ஆவி (உயிர்) போன பின்பு, அந்தப் பணத்தை யார் அனுபவிக்கப் போகிறார்கள்? யோசித்துப்பாருங்கள் பாவிகளே! என்று அவ்வைப்பாட்டி மிகவும் வருந்துகின்றார்.

இவர்களைப் போன்றே, ஒருவன் தன்னிடம் உள்ள கற்ற அறிவைக் கொண்டு, அதன்வாயிலாக பெற்ற அனுபவத்தை மற்றவர்களுக்குக் கற்றுக் கொடுக்காமல், தனக்கு மட்டுமே பயன்படும் வகையில் சுயநலம் கருதி வாழ்கின்றவன், தனக்குத் தானே கேடினை உண்டாக்கிக் கொள்கின்றான்.

இப்படிப்பட்டவர்கள் தன்னை **“நான்”, “எனது”, “என்னுடையது”** போன்ற அஹங்கார, மமகாரங்களில் சிக்கிக் கொண்டு, தன்னுடைய உண்மை நிலை அறியாது, தன் உள்ளே உறைபவனையும் உணராது, தன் இஷ்டம் போல, மனம் போன போக்கிலேயே வாழ்ந்துக் கொண்டிருப்பார்கள்.

இவர்களது இத்தகைய அஹங்காரமும் **(நான்),** மமகாரமும் **(எனது),** இவர்களைத் தன்நிலை அறியாத தற்குறிகளாக மாற்றி, அறிய வேண்டிய அரிய உண்மையை அறிய முடியாமல் மறைத்து, இவர்கள் சென்று சேர வேண்டிய இலக்கினை அடைய முடியாமல், அவர்களது அத்தகைய அறியாமை அவர்கள் அறிவை மறைத்துவிடும்.

இதற்காக, **“தான் பெற்ற இன்பம் பெருக இவ்வையகம்”** என்ற உயர் ஞானத்தை அடைந்த உத்தம மஹான்கள், தங்கள் கருணையினால் மற்றவர்களையும் மாற்ற விரும்பி, இத்தகைய உயர்ந்த ஆன்மவியல் ஸ்லோகங்களின் வாயிலாக வாழ்வாங்கு வாழ வழிகாட்டுகின்றார்கள்.

எனவே, இந்த ஐந்து ஸ்லோகங்களையும் கற்று, அதன் விளக்கத்தை புரிந்துக்கொண்டு, பிறருக்கும் அதை புகட்டி, பிறவாப் பெரு நிலையை ஒவ்வொருவரும் அடைய வேண்டும் என்பதே பகவான் ஸ்ரீ ஆதிசங்கரரின் ஆவல்.

நன்றி! என்றும் அன்புடன்,

**ப்ரக்ஞன்**

# அத்வைத பஞ்சரத்னம்

**ஸ்லோகம் - 1**

**நாஹம் தேஹோ நேந்த்ரியாண் யந்தரங்கோ**
**நாஹங்கார: ப்ராணவர்கோ ந புத்தி: |**
**தாராபத்ய ஷேத்ர வித்தாதிதூர:**
**ஸாக்ஷீ நித்ய: ப்ரத்யகாத்மா சிவோஹம் || {1}**

nāhaṃ deho nendriyāṇyantaraṅgo
nāhaṅkāraḥ prāṇavargo na buddhiḥ ।
dārāpatyakṣetravittādidūraḥ
sākṣī nityaḥ pratyagātmā śivo'ham ॥ {1}

**பொருள்:**

**இந்த பருஉடல், மனம், புத்தி, அஹங்காரம் இவைகள் எதுவும், "நான்" அல்ல, அதுபோன்றே, பிராணவாயுக்களோ, மனைவி, மக்களோ, நில, புலன்களோ, சொத்து, சுகங்களோ இவைகள் எதுவும் என்னுடையதும் அல்ல.**

இவற்றிற்கெல்லாம் அப்பாற்பட்டு, அனைத்தையும் அறிகின்ற சாக்ஷியாக, சாஸ்வதமாக உள்ள அந்தராத்மாவான **சிவனே நான்.**

**ஸ்லோகம் - 2**

**ரஜ்வஜ்ஞாநாத்பாதி ரஜ்ஜௌ யதாஹி:**
**ஸ்வாத்மாஜ்ஞாநாத் ஆத்மநோ ஜீவபாவ: |**
**ஆப்தோக்த்யாஹிப்ராந்தி நாசே ஸ ரஜ்ஜு:**
**ஜீவோ நாஹம் தேசிகோக்த்யா சிவோஹம் || {2}**

rajjvajñānādbhāti rajjau yathāhiḥ
svātmājñānādātmano jīvabhāvaḥ ।
āptoktyā'hibhrāntināśo sa rajju-
rjīvo nāhaṃ deśikoktyā śivo'ham ॥ {2}

**பொருள்:**

கயிறு என்று தெரியாததினால், கயிற்றை பாம்பு என்று எண்ணிக்கொள்வது போன்று, ஆத்மஞானம் இல்லாததினால், ஆத்மாவை ஜீவன் என்று எண்ணிக்கொண்டு அனைத்தையும் **‘நான்’, ‘எனது’** என்று தவறாக புரிந்துக் கொள்கின்றான்.

அதுவே, வேறு ஒருவர் அங்கு வந்து, அது பாம்பு அல்ல! என்று கூறி, அதன் மீது வெளிச்சத்தை போட்டுக் காட்டி, அதனை கயிறு என்று சுட்டிக்காட்டுவது போன்று, தன்னை அறிந்த சத்குரு உபதேசித்த உண்மையை உணர்ந்துக் கொண்ட பிறகு, **“நான்”** என்பது ஜீவன் அல்ல, அந்த பரமாத்மாவாகிய **சிவனே நான்.**

## ஸ்லோகம் - 3

**ஆபாதீதம் விச்வமாத்மந்ய ஸத்யம்**
**ஸத்யஜ்ஞானாந்தரூபே விமோஹாத் |**
**நித்ராமோஹாக் ஸ்வப்ன வத்தந்நஸத்யம்**
**சுத்த: பூர்ணோ நித்ய ஏக: சிவோஹம் || {3}**

ābhātīdaṃ viśvamātmanyasatyam
satyajñānānandarūpe vimohāt ।
nidrāmohātsvapnavattanna satyam
śuddhaḥ pūrṇo nitya ekaḥ śivo'ham || {3}

## பொருள்:

உண்மை, பேரறிவு, பேருணர்வு மற்றும் பேரானந்தம் என்ற உயரிய ஆத்மாவின்மீது, இந்த பொய்யான இந்த உலகம்

எண்ணங்களால் ஏற்றிவைக்கப்பட்டு, தோற்றம் அளிக்கின்றது. அதற்குக்காரணம், அறியாமையினால் உண்டான **ஆசைகளே** காரணம் ஆகும்.

பொதுவாக, நம் அனைவருக்கும் தூக்கத்தில் கனவு உண்டாகின்றது. அந்தக் கனவில் காணப்படுகின்ற அத்தனை உலகக் காட்சிகளும் உண்மையில் கிடையாது. அவைகள் அத்தனையும் கனவு உலகில் தோன்றுகின்ற மனதின் **கற்பிதம்** என்பதுப் போன்று, ஆத்மாவின்மீது எண்ணங்களாக மனதின் மூலம் ஏற்றி வைக்கப்பட்டு, இந்த உலகமாகக் காட்சியளிக்கும் தோற்றங்கள் அத்தனையும், நனவு உலகில் தோன்றுகின்ற மனதின் கற்பிதம் ஆகும்.

ஆகவே, இந்த **கனவு, நனவு** என்ற இரண்டுக்கும் அப்பாற்பட்ட, தூயதும், பூர்ணமானதும், நித்யமானதும், ஒன்றேயானதுமான, **சிவனே நான்.**

**ஸ்லோகம் - 4**

**நாஹம் ஜாதோ ந ப்ரவ்ருத்தோ ந நஷ்டோ**
**தேஹஸ்யோக்தா: ப்ராக்தா: ஸர்வதர்மா: |**
**கர்த்ருத் வாதிஸ்சின்மயஸ்யாஸ்தி நாஹங்**
**காரஸ்யைவ ஹ்யாத்மநோ மே சிவோஹம் || {4}**

nāhaṃ jāto na pravṛddho na naṣṭo
dehasyoktāḥ prākṛtāḥ sarvadharmāḥ ।
kartṛtvādiścinmayasyāsti nāhaṃ-
kārasyaiva hyātmano me śivo'ham ॥ {4}

**பொருள்:**

**நான் பிறப்பதும் இல்லை!, வளர்வதும் இல்லை!, பிறகு அழிவதும் இல்லை!. இயற்கையான இவைகளைப் போன்ற அனைத்து தர்மங்களும், இந்த அழியக்கூடிய உடலுக்கே உள்ளன. ஞான மயமான அழியாத ஆத்மாவுக்கு "செய்பவன்" என்ற நிலையே கிடையாது. அஹங்கார ரூபமான ஜீவனுக்குத்தான் செயல்கள் என்ற இவைகள் அனைத்தும் உண்டு. ஆகவே, செயலில் செயலற்ற சிவனே நான்.**

**ஸ்லோகம் - 5**

**மத்தோ நான்யத்கிஞ்சிதத்ராஸ்தி விச்வம்**
**ஸத்யம் பாஹ்யம் வஸ்து மாயோபக்லுப்தம் |**
**ஆதிர்சாந்தர்பாஸமாநஸ்ய துல்யம்**
**மய்யத்வைதே பாதி தஸ்மாத் சிவோஹம் || {5}**

matto nānyatkiñcidatrāsti viśvaṃ
satyaṃ bāhyaṃ vastu māyopaklṛptam ।
ādarśāntarbhāsamānasya tulyaṃ
mayyadvaite bhāti tasmācchivo'ham ॥ {5}

**<u>பொருள்:</u>**

**என்னைத்தவிர, எனக்கு வேறாக இந்த உலகம் என்பது உண்மையில் கிடையாது. அவ்வாறு, இந்த உலகம் இருப்பதுப் போலத் தோன்றுவது, என்னுடைய மனதில் ஏற்றிவைக்கப்பட்ட ஏராளமான எண்ணங்களின் கற்பிதம் என்பதினால், அது மனதில் தோன்றி, மறையும் மாயா உருவங்கள். ஆதலால் அவைகள் உண்மை இல்லை.**

**அது மனதின் மாயையின் காரணமாக, இருப்பதைப் போன்று தோன்றுவது, கண்ணாடியில் தெரிகின்ற பிரதிபிம்பம் போன்றே, எல்லையற்ற பேரறிவின் பிரதிபிம்பம் இந்த மனதில்பட்டு, இல்லாததை இருப்பதுப்போலக் காட்டுவது என்பது, என்றும் அழியாத தன்னுடைய இருப்பினால்தான் என்பதினால், அந்த இருப்பாகிய சிவனே நான்.**

## முடிவுரை:—

ஒவ்வொரு மனிதனும் தன் பிறப்பின் உண்மை நோக்கத்தை மறந்து, தன் உண்மை சொரூபத்தையும் மறந்து, அஹங்கார, மமகாரத்தின் காரணமாக, தன்னை **"நான் யார்?"** என்று விசாரித்து அறியாமல், அனைத்து செயலுக்கும், அதன் விளைவுகளுக்கும் தானே காரணம் என்பது போன்று, இந்த உலகத்தின் மீது கொண்ட, அதீத பற்றின் காரணமாக மதி மயக்கத்தில், ஆசையில் ஆடுகின்றான்.

ஒருவன் தன் கண்ணை மூடிக்கொண்டு இந்த உலகமே இருண்டு விட்டது என்று நினைப்பது எப்படி அறியாமையோ?, அதுபோன்று, புலன்களின் அடிப்படையில் உண்டான இந்த உலகமும் உண்மை அல்ல. அதை, அறியாமல் அற்ப புலன்களின் வாயிலாக, இந்த மொத்த அண்ட சராசரங்களையும் அறிகின்ற ஆராய்ச்சியில் ஆர்வமாக இருக்கின்ற மனிதனின் மதி மயக்கத்தை என்னவென்று கூறுவது?

இவனது இந்த ஐம்புலன்களும், அத்துடன் மனமும், இந்த உடலும் செயல்பட வேண்டுமனால், அதற்கான ஒரு **மகாசக்தி** இருப்பதை மறந்து விட்டு, இந்த உடலையும், மனதையும் **"நான்"** என பாவித்துக்கொண்டு, மனதின் ஏற்றி

வைக்கப்பட்ட ஏராளமான எண்ணங்களால், இந்த உலக காரியங்களை செய்து அதில் கிடைக்கின்ற சுக, துக்கங்களில் சிக்கிக் கொண்டு, தன் நிலை மறந்து தடுமாறுகின்றான்.

ஒவ்வொரு ஜீவர்களின் உடலுக்குள்ளும், அந்த ஜீவனை வழிநடுத்துகின்ற அழியாத **'வஸ்து'** ஒன்று இருப்பதை அறிந்து கொள்பவன் மட்டுமே, என்றும் அழியாத பேரின்ப பெரு வாழ்வைப் பெறுகின்றான்.

அப்படிப்பட்ட உயர்ந்த வஸ்து தன்னுள் உயிராய், உணர்வாய் இருக்கின்றதை அறிந்தவன், அந்த பரமா(ஆ)த்மா மட்டுமே சத்தியமான, நித்தியமான, நிதர்சனமான உண்மை என்பதை புரிந்துக் கொண்டு, அது ஒன்று மட்டுமே தன்னை **"நான்"** என்று கூறிக் கொள்ளக்கூடிய தகுதி கொண்டது என்பதையும் அறிகின்றான்.

அதாவது, ஒரு பளிங்கு போன்ற கண்ணாடினால் ஆன பொருளின் அருகே வைக்கப்பட்ட செம்பருத்தி மலரின் சிவந்த நிறத்தை பெற்றுக் கொண்ட அந்த பளிங்குக் கண்ணாடி, அந்த சிவந்த நிறத்தில் காணப்படுவதுப்போன்று, **பரமா(ஆ)த்மா** ஆகிய தன்மீது, இந்த உலகம் என்ற விசய, சுகங்களை ஏற்றி வைத்துக் கொண்டு, தன் உண்மை சொருப்பத்தை மறந்து,

தன் இயல்பை, தன் இருப்பை அறியாமல் இந்த மனிதன் **மனம் போன போக்கிலேயே** போய்க்கொண்டிருக்கிறான்.

இந்த அறியாமையை அனைவரும் அறிந்துக் கொண்டு, என்றும் அழியாத அந்த இருப்பை, பரமா(ஆ)த்மாவை ஒவ்வொருவரும் தன்னுள் உணர்ந்துக்கொண்டு, ஜீவனாகிய தன்னுடைய இருப்புக்கும், இந்த மொத்த பிரபஞ்சத்தின் இருப்புக்கும் அது ஒன்றே காரணம் என்பதை கண்டறிந்து, அந்த **சத்** என்ற இருப்பே, **சித்** என்ற அறிவாக அனைத்து உயிரினங்களிலும் வியாபித்துள்ளது என்பதை அறிந்து, அந்த **"சிவனே நான்"** என்பதை, அறிவது ஒன்றே அறியாமைகள் அகன்ற மனதின் உயரிய, உன்மையான **ஆனந்தம்** ஆகும்.

ஓம் தத் ஸத்!



# அத்வைத பஞ்சரத்னம்



## ஸ்ரீ ஆதிசங்கரர் அருளியது